தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.4 . நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது

தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் அது பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார் பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தரப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணத்தினால் ஆகும்.
- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (1) (ஈ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) கணக்காய்விடம் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு அமைய கடந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒத்திசைந்து இருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	இந்த அறிக்கையின் பந்திக்கான முன்னளிப்பு
கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீதிகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வேறுபாடுகள் காணப்படுதல்.	1.6.2

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்

1.6.1 மீண்டுவரும் செலவுகள்

ஆணைக்குழுவினால் வேறு செலவினத் தலைப்புக்களுக்காக ஏற்கப்பட்ட ரூ. 6,429,201 தொகைச் செலவு நிதிப் பாய்ச்சல் கூற்றில் வேறு செலவினத் தலைப்புக்களுக்காக ஏற்கப்பட்ட செலவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

1.6.2 நிதி அல்லாத சொத்துக்கள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த மின் இயந்திரவியல் சாதனங்களின் பெறுமதியாகிய ரூ. 169,483 தொகை ஏசீஏ 6, நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டிற்கு உரிய கொள்வனவுகள் என்ற வகையில் பதிவு செய்யாது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆரம்ப மீதியுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டு இருந்தது. இதனால் நிதி அல்லாத சொத்துக்களில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆரம்ப மீதி கடந்த வருடத்தின் இறுதி மீதிக்கு சமமாகி இருக்கவில்லை.

1.6.3 ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணி வரப்பட்டு இருக்காமை

ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு உள்ள வாகன விபத்துக்கள் தொடர்பான ஆவணம் உரிய வகையில் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்பட்டு இருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 இலஞ்சம் தொடர்பான தேடல்களில் – இலஞ்சம் என்ற வகையில் பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சனவரி 01 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் 29 தேடல்களுக்கு ரூ. 4,704,000 தொகை முற்பணம் வழங்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி தேடல்களுக்காக ரூ. 471,630 தொகை செலவுகள் ஏற்கப்பட்டு இருந்தன. மேற்படி 29 தேடல்களுள் பெறுமதி ரூ. 2,099,000 தொகை ஆகிய 15 தேடல்கள் வெற்றி அடைந்து இருந்ததுடன் ரூ. 2,535,000 தொகை ஆகிய 14 தேடல்கள் தோல்வி அடைந்து இருந்தன.

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு முன்வருதல்

(அ) 03 செலவு விடயங்களில் ரூ. 740,814 தொகை ஆகிய ஒதுக்கீட்டு மீதியினைத் தாண்டி ரூ. 222,033 தொகை பொறுப்புக்களுக்கு முன்வந்து இருந்தன.

(ஆ) நி.ஒ. 94 (2) மற்றும் (3) இன் பிராகரம் கைச்சாத்திடப்பட்ட கடப்பாடுகள் கூற்று, இணைப்பு – (iv) இல் வருடாந்த மீண்டுவரும் சேவைகள், விநியோகங்கள் மற்றும் பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும் எனினும் அதன் கீழ் வராத பிரயாணச் செலவுகள், மேலதிக நேரச் செலவுகள் மற்றும் எரிபொருள்களுக்கு உரிய ரூ. 564,851 தொகை ஆகிய பொறுப்புக்கள் என்பன மேற்படி கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான முன்னளிப்பு	இணங்கி ஒழுகாமை
(அ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஆ)	2016 மார்ச் 31 ஆம் திகதிய மற்றும் 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 3.1.5 ஆம் பந்தி	ஒவ்வொரு நிதி ஆண்டிலும் பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் பொது அறிக்கைக்கு அமைய கழித்து ஒழுக்கப்பட வேண்டிய, பழுபார்க்கப்பட வேண்டிய, விற்பனை செய்யப்பட

		வேண்டிய மற்றும் ஏனைய தாபனங்களுக்கு ஒப்படைக்கக் கூடிய பொருட்கள் தொடர்பில் பொருத்தமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த வருடத்தின் பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனினும் அதற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.
(இ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தி	ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு இருந்த செயலாற்றுகைத் திட்டம் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஈ)	2022 டிசம்பர் 13 ஆம் திகதிய மற்றும் 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்கள் கோவையின் 2.2 ஆம் பந்தி	தாபனத்திற்கு உரித்தாகும் நிதி அறிக்கையிடல் மாதிரிகளை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும் எனினும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய ஏசீஏ 1, ஏசீஏ 1 (ii), ஏசீஏ 1 (iii) மாதிரிகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு இருந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு மேற்படி மாதிரிகளில் வருமானம் அல்லாத வரவுகள் ரூ. 9,166,942 தொகை குறிப்பிடப்பட்டு இருந்தது.

3. செயலாற்றுகை மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1. கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டில் 69 வழக்குகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் அவற்றுள் 40 வழக்குகள் அதாவது நூற்றிற்கு 58 வீதமான வழக்குகள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டு இருந்தன. 18 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதியாகி இருந்ததுடன் குற்றவாளியாக்கப்பட்டு இருந்தது

11 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மாத்திரமே ஆவர். மேலும் ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டில் 89 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததுடன் 45 வழக்குகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன. கணக்காய்வு செய்யப்பட்ட தினம் ஆகும் போது மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது அவற்றுள் 29 வழக்குகள் மாத்திரமே ஆகும்.

(ஆ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆணைக்குழுவின் சட்டப் பிரிவிடம் வேலை பூர்த்தி செய்யப்படாத 1,508 கோப்புக்கள் காணப்பட்டன. அவற்றுள் 489 கோப்புக்கள் 05 வருடங்களுக்கும் மேலான காலப்பகுதிக்கு உரித்தானவை ஆகும் என்பதுடன் 33 கோப்புக்கள் 10 வருடங்களுக்கு மேலான காலம் தொடக்கம் நிலவி வந்த கோப்புக்களாக காணப்பட்டன. 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 926 கோப்புக்கள் காணப்பட்டதுடன் அதன் காலப்பகுப்பாய்வு கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) இலங்கையில் இருந்து இலஞ்சம் மற்றும் ஊழலினை ஒழிப்பதற்கான தேசிய செயலாற்றுகைத் திட்டதிற்கு 2019 பெப்ரவரி 05 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்று இருந்ததுடன் 2019 மார்ச் 18 ஆம் திகதி அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தன. கணக்காய்வு திணம் ஆகும் போது மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3 ½ வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்டு உள்ள 27 பணிகளுள் 11 பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

3.2 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் நட்டங்கள் மற்றும் கைவிடல்களில் 10 வருடங்களிலும் மேலான ரூ. 34,805 தொகை 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூ. 97,950 தொகை மற்றும் 5 வருடங்களிலும் குறைவான ரூ. 507,088 தொகை ஆகிய 08 மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ. 447,680 தொகை செலவழித்து 32 முறைப்பாட்டுப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததுடன் கணக்காய்வு செய்யப்பட்ட தினம் ஆகிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது 17 முறைப்பாட்டுப் பெட்டிகள் மாத்திரம் சில அரச தாபனங்களில் தாபிக்கப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய 15 பெட்டிகள் பயன்படுத்தப்படாது ஜாவத்தைக் களஞ்சியசாலையில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

(ஆ) 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இருந்த 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்தும் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலேனும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

4. மனித வள முகாமைத்துவம்

4.1 பதவியணி வெற்றிடங்கள்

ஆணைக்குழுவின் சிவில் பதவியணியின் தகவல்களுக்கு அமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட நிலை மட்டத்தில் உள்ள 36 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்தில் உள்ள 203 வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 158 வெற்றிடங்களும் நிலவின. புலனாய்வுகளுக்கான பதவியணியின் தகவல்களுக்கு அமைய மேற்படி பதவியணியில் 15 வெற்றிடங்கள் நிலவின.

எச்.எஸ்.எஸ்.பெரேரா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்.
கணக்காய்வாளர் நாயகம். சார்பில்

நான்காம் அத்தியாயம்

4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையில்)

4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையில்)

	விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு	உண்மையான வெளியீடு	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மை வெளியீடு		
				100% - 90%	75% - 89%	50% - 74%
01	பூர்த்தி செய்யப்பட்ட புலனாய்வுக் கோப்புக்களின் எண்ணிக்கை	3,500	3,749	✓		
02	நடாத்தப்பட்ட முறைப்பாடுகள் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	48	47	✓		
03	நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை	75	89	✓		
04	நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	140	146	✓		
05	பயிற்சி பெற்ற பதவியணி உறுப்பினர்களின் எண்ணிக்கை	436	348	✓		
06	நடாத்தப்பட்ட ஆணைக்குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	12	09		✓	
07	நடாத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	04	03		✓	
08	ஏற்கப்பட்ட மீண்டுவரும் செலவினங்கள்	575,439,000.00	537,427,319.29		✓	
09	ஏற்கப்பட்ட மூலதனச் செலவுகள்	16,006,000.00	12,691,885.05			✓

ஐந்தாம் அத்தியாயம்

5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

5.1. அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்

5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

5.1. அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான கூற்றின் இலக்கம் : 16.5 இன் கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் "ஒவ்வொரு துறையிலும் இலஞ்சம் மற்றும் ஊழலினை தெளிவாகத் தென்படும் வகையில் குறைத்தல்" இற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இலக்குகள்	நோக்கம்	வெற்றிக் குறிகாட்டிகள்	இது வரை வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதன் சதவீதம்		
			0%-49%	50%-74%	75%-100%
அரச சேவையின் ஒவ்வொரு துறையிலும் இலஞ்சம் மற்றும் ஊழலினை தெளிவாகத் தென்படும் வகையில் குறைத்தல்	இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பான பொதுமக்களின் அறிவினை விருத்தி செய்வதன் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் பங்களிப்பினை விருத்தி செய்து கொள்ளல் • ஆண்டு ஒன்றிற்கு 140 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்	• பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் 146 இனை நடாத்துதல்			✓
	ஊழலுக்கு எதிராக சட்டத்தினை அமுல்படுத்தும் தாபனம் ஒன்றாகிய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை மேலும் வலுப்படுத்தல் • சட்ட அலுவலர்கள், புலனாய்வு உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களின் கொள்ளளவினை விருத்தி செய்தல். • இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய	• 28 புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக புலமைத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	✓ ✓		

இலக்குகள்	நோக்கம்	வெற்றிக் குறிகாட்டிகள்	இது வரை வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதன் சதவீதம்		
			0%-49%	50%-74%	75%-100%
	சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வசதிகளை விருத்தி செய்வதற்காக மூலதனச் செலவுகளாக ரூ. 16,006,000 இனை ஒதுக்குதல்	• ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் • வசதிகளை மேம்படுத்துவதற்காக மூலதனச் செலவுகளாக ரூ. . 12,691,885 தொகையினைச் செலவழித்தல்		✓	
அரச சேவையின் ஒவ்வொரு துறையிலும் இலஞ்சம் மற்றும் ஊழலினை தெளிவாகத் தென்படும் வகையில் குறைத்தல்	இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான நீதிமன்ற நடவடக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் சட்டக் கொள்கைகளில் திருத்தம் மேற்கொள்ளல் • 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் இலஞ்சம் தொடர்பான சட்டம், சொத்துக்கள் ,பொறுப்புக்கள் சட்டம் மற்றும் ஆணைக்குழுச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ளல் மற்றும் மேற்படி சட்டங்களை ஒன்றிணைத்து புதிய ஒருங்கிணைந்த சட்டம் ஒன்றினைத் தயாரித்தல்.	சட்டத்தினைத் திருத்துவதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெறல்		✓	

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் சுருக்கமாக

வெற்றிகள்

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இரண்டு மாடிக் கட்டிடத்தை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- 25 வருடங்களிலும் பழைமையான இலஞ்சம் தொடர்பான சட்டம், சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டம் மற்றும் ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல்.

- நாளாந்தம் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆய்வு செய்து வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு போதியளவான விடயங்களுடனான முறைப்பாடுகளை மாத்திரம் புலனாய்விற்காக முன்வைக்கும் வழிமுறையினை அறிமுகம் செய்வதன் மூலம் புலனாய்வு உத்தியோகத்தர்களினதும் மற்றும் சட்ட அலுவலர்களினதும் கடமை நேரத்தினை மிகவும் பயனுறுதி உடையதாக்கிக் கொள்வதற்கு இயலுமாகியமை

- புலனாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட புதிய வழிமுறையின் காரணமாக 2015 ஆம் ஆண்டிற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கோப்புக்களின் புலனாய்வுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு இயலுமாகியமை

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை வலுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதி உதவியினை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டு உள்ளமை.

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வாகனக் குழாமிற்காக 02 வாகனங்கள் கிடைக்கப் பெற்றமை.

சவால்கள்

- ஊழல்களை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சாட்சிகளை வழங்குவதற்கு பொதுமக்கள் வழங்கும் ஒத்துழைப்பு குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.

- மேற்படி பதவிகளை வகிக்கும் நபர்களின் பாரிய அளவிலான இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு வியாபாரிகள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற தரப்பினர்கள் முன் வராமை.

- இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான வேலைத்திட்டம் ஒன்றினை அரச துறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அரச உத்தியோகத்தர்களின் ஆர்வம் குறைவாகக் காணப்படுதல்.

- பல்வேறு விடயத் துறைகள் தொடர்பாக நிபுணத்துவ அறிவினை உடைய விஷேட புலனாய்வு உத்தியோகத்தர்கள் தாபனத்தில் காணப்படாமை.

- ஊழல் வழக்குகளை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்காக ஆவணங்களின் அடிப்படையில் அமைந்த சான்றுகளை முன்வைக்க வேண்டும் எனினும் அவ்வாறான சான்றுகளை வழங்குதல் சிரமமாகக் காணப்படுதல்.
- முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்து வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழலினை ஒழிக்க முடியாது என்பதனையும், அதற்காக இலஞ்சம் மற்றும் ஊழலினைத் தடுத்தல் தொடர்பாக பொதுமக்களின் அறிவினை விருத்தி செய்தல் வேண்டும் என்பதனையும் பெரும்பாலானோர் அறியாமல் இருத்தல்.
- இலஞ்ச ஆணைக்குழுவின் பதவியணிக்கு போதியளவான அலுவலக இடவசதிகள் இல்லாமை.

ஆறாம் அத்தியாயம்

6. மனித வளங்கள் பற்றிய கண்ணோட்டம்

6.1.ஆளணி முகாமைத்துவம்

6.2.தாபனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை பாதிப்புச் செலுத்தும் விதம்

6.3. மனிதவள அபிவிருத்தி

6. மனித வளம் தொடர்பான கண்ணோட்டம்

6.1. ஆளணி முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட ஆளணி	நிலவும் ஆளணி	வெற்றிடங்கள் / மிகை
சிரேஷ்ட	70	34	36
மூன்றாம் நிலை	232	29	203
இரண்டாம் நிலை	442	284	158
ஆரம்ப நிலை	140	84	56

6.2. தாபனத்தின் தாபனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை பாதிப்புச் செலுத்தும் விதம்

போதிய எண்ணிக்கையிலான ஆளிணியினை சேவையில் ஈடுபடுத்தலின் அடிப்படையில் ஊழியர்களின் விடயப் பரப்பு தேவையற்ற வகையில் விரிவடைவதில்லை என்பதுடன் அதனூடாக பின்னாய்வு ஒன்றுடனான வினைத்திறனுடைய மற்றும் பயனுறுதி உள்ள வகையில் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆற்றல் உள்ளது. அதி உயர் செயலாற்றுகை ஒன்றினை ஈட்டிக் கொள்வதற்கும் அது துணை புரிகின்றது.

ஆகவே இந்த ஆணைக்குழுவில் காணப்படும் பதவிகளுக்கு உரிய வெற்றிடங்களை கீழே குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் பூர்த்தி செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2015 ஆம் ஆண்டில் புதிய பதவிகளை அனுமதித்துக் கொள்ளும் போது 2025 ஆம் ஆண்டு வரை பத்து வருட கால தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு பதவி அனுமதித்துக் கொள்ளப்பட்டு உள்ளது.
- இடவசதிகள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளதனால் இடவசதிகளைக் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும், உத்தேசப் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் சகல வெற்றிடங்களையும் பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6.3. மனித வள அபிவிருத்தி

உள்நாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள்

தொடர் இலக்கம்	பயிற்சிச் செயலமர்வு நடைபெற்ற நிறுவனம்	பயிற்சிச் செயலமர்வின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவிகள்	காலப் பகுதி	செலவு
1.	இலங்கை அச்சுப்பதிப்பு நிறுவனம்	புத்தகம் கட்டுதல் பாடநெறி	அலுவலகப் பணியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் 04 பேர்	2022.01.12 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் வரை	ரூ. 97,000.00

தொடர் இலக்கம்	பயிற்சிச் செயலமர்வு நடைபெற்ற நிறுவனம்	பயிற்சிச் செயலமர்வின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவிகள்	காலப் பகுதி	செலவு
2.	இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு	உளவுத் துறைத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் உளவுத் துறை அறிக்கைகளைத் தயாரித்தல்	புலனாய்வு உத்தியோகத்தர்கள் 28 பேர்	2022.02.10 மற்றும் 2022.02.11	ரூ. 17,265.00
3.	திறன் விருத்தி நிதியம்	விலைமனு கோரும் ஆவணங்களைத் தயாரித்தல்	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 02 பேர்	2022.02.17 மற்றும் 18	ரூ. 14,000.00
4.	திறன் விருத்தி நிதியம்	அரச பெறுகைகள் நடைமுறை தொடர்பான பயிற்சிப் பாடநெறி	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 02 பேர்	2022.02.24 மற்றும் 25	ரூ. 14,000.00
5.	இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு	Offence of Corruption from the Perspective of a Prosecutor	சட்ட உதவி உத்தியோகத்தர்கள் 11 பேர்	2022.02.25	ரூ. 34,055.00
6.	திறன் விருத்தி நிதியம்	சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கான ஒழுக்காற்று மற்றும் அலுவலக நெறிமுறைகள்	அலுவலகப் பணியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் 05 பேர் மற்றும் சாரதிகள் 02 பேர்	202 2.02.28 2022.03.02 2022.05.24 2022.05.25	ரூ. 59,500.00
7.	திறன் விருத்தி நிதியம்	Workshop on Salary Conversion	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 02 பேர்	2022.03.30 மற்றும் 2022.08.26	ரூ. 14,000.00
8.	Turnkey Computer System (Pvt) Ltd		தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவி உத்தியோகத்தர் ஒருவர்	2022.04.09	ரூ. 21,750.00

தொடர் இலக்கம்	பயிற்சிச் செயலமர்வு நடைபெற்ற நிறுவனம்	பயிற்சிச் செயலமர்வின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவிகள்	காலப் பகுதி	செலவு
9.	திறன் விருத்தி நிதியம்	Effective Online communication and use of Technology	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர்	2022.04.27	ரூ. 4,000.00
10.	உத்தியோகபூர்வ மொழிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனம்	சிரேஷ்ட மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான 200 மணித்தியால தமிழ் மொழிப் பாடநெறி	சட்ட அலுவலர்கள் 08 பேர் மற்றும் கணக்காளர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் 02 பேர்	வாரம் ஒன்றிற்கு 02 நாட்கள் வீதம் 2.5 மாதங்கள்	ரூ. 165,000.00
11.	உத்தியோகபூர்வ மொழிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனம்	இரண்டாம் நிலை மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தியால தமிழ் மொழிப் பாடநெறி	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 22 பேர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் 15 பேர்	வாரம் ஒன்றிற்கு 02 நாட்கள் வீதம் 2.5 மாதங்கள்	ரூ. 360,000.00
12.	நீதி மற்றும் நியாயத்திற்கான மத்திய நிலையம்	Workshop Investigation and Prosecuting Gender Impact of sexual Bribery	உத்தியோகத்தர்கள் 190 பேர்	2022.07.27 2022.07.29 2022.08.10 2022.09.08 2022.09.14	
13.	அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	தாபன விதிக் கோவை தொடர்பான நிகழ் நிலைப் பாடநெறி	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 05 பேர்	2022.09.28 2022.09.29 2022.09.30 2022.09.31	
14.	இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு	புதிய உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வூட்டல் செயலமர்வு	புதிய உத்தியோகத்தர்கள் 58 பேர்	2022.10.20 2022.10.21 2022.10.25 மற்றும் 2022.12.26	

தொடர் இலக்கம்	பயிற்சிச் செயலமர்வு நடைபெற்ற நிறுவனம்	பயிற்சிச் செயலமர்வின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவிகள்	காலப் பகுதி	செலவு
15.	தொலைக் கல்வி மத்திய நிலையம்	Advanced Excel Training	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர்	2022.12.19 மற்றும் 2022.12.21	ரூ. 12,000.00
16.	தேசிய தொழிற் கல்வி நிறுவனம்	அரச உத்தியோகத்தர் களின் சம்பளங்களைத் தயாரித்தல்	அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர்	2022.09.08	ரூ. 5,000.00

வெளிநாட்டுப் பாடநெறிகள்

தொடரிலக்கம்	பயிற்சிகள் / செயலமர்வு / கருத்தரங்கு / நடைபெற்ற நாடு	பயிற்சிச் செயலமர்வு / கருத்தரங்கின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பதவிகள்	கால எல்லை	மொத்த முதலீடு
01	இந்தியா	Skill Development and Capacity Building (High Commission of India online (Central Academy for Police Training (CAPT) - Online	புலனாய்வு உத்தியோகத்தர்கள்	21/02/2022 முதல் 25/02/2022 வரை	

தொடரிலக்கம்	பயிற்சிகள் / செயலமர்வு / கருத்தரங்கு / நடைபெற்ற நாடு	பயிற்சிச் செயலமர்வு / கருத்தரங்கின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பதவிகள்	கால எல்லை	மொத்த முதலீடு
02	ருமேனியா	Training Program on Skill Development and Capacity Building - Online	புலனாய்வு உத்தியோகத்தர்கள்	21/02/2022 முதல் 25/02/2022 வரை	
03	பாகிஸ்தான்	Re-Executive Programme for Senior Officers	திருமதி. கே.கே.டீ.எம். கொடிதுவக்கு – உ/ப/ (சட்டம்) திரு. ஜீ.டீ.மாதுவகே உ/ப/ (சட்டம்) திரு. எஸ்.எம்.சப்ரி உ/ப/ (சட்டம்) ரீ.ராஜ்குமார் – உ/பொலிஸ் அத்தியட்சகர்	21/03/2022 முதல் 03/04/2022 வரை	அ. டொ.1,850
04	வியானா	Global Operational Network of Anti Corruption Low Enforcement Authorities (Globe Network)	திருமதி. எம்.ஆர்.வை. கே.உடவெல பிரதிப் பணிப்பாளர் நாயகம்	28/06/2022 முதல் 30/06/2022 வரை	அ. டொ.375 காப்பறுதி ரூ.3,898
05	வட கொரியா	2022 ACRC Training Course for International Anti Corruption Practitioners	திருமதி.டீ.ஜீ.ஜே. ஹெய்யந்துடுவ பிரதிப் பணிப்பாளர் நாயகம் கே.எச்.ஐ.எஸ். சிறிவர்தன உதவிப் பணிப்பாளர் நாயகம்	14/11/2022 முதல் 23/11/2022 வரை	அ. டொ.1,468 காப்பறுதி மற்றும் வீசா ரூ.3,898

தொடரிலக்கம்	பயிற்சிகள் / செயலமர்வு / கருத்தரங்கு / நடைபெற்ற நாடு	பயிற்சிச் செயலமர்வு / கருத்தரங்கின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பதவிகள்	கால எல்லை	மொத்த முதலீடு
06	யப்பான்	Criminal Justice Response to Corruption	ஜீ.ஏ.டீ.சஞ்ஜீவனீ – உதவிப் பணிப்பாளர் நாயகம்	01/11/2022 முதல் 30/11/2022 வரை	அ. டொ.1,200
07	அவுஸ்திரியா – வியானா	UNODC UNCAC : Invitation to 16th WGAR, 2nd Resumed 13th IRG and 11th EMIC (States Parties)	ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிகதி திருமதி. தீபாலி விஜேசுந்தர – ஆணையாளர் II டீ.ஐ.ராஜபக்ஷ – உதவிப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம்.ரீ.டீ. பண்டார –உ/ப (சட்டம்)	07/11/2022 முதல் 11/11/2022 வரை	அ. டொ.6,310 ரூ.513,201
08	Spain	3rd Plenary Meeting of the Global Operational Network of Anti - Corruption Law Enforcement Authorities (Globe Network)	டபிள்யூ.கே. தமித் விஜேரத்ன – பணிப்பாளர் நாயகம்	15/11/2022 முதல் 17/11/2022 வரை	அ. டொ.1,175 ரூ. 4,140
09	Kenya-Nairobi	International Expert Meeting on asset return and the 2030 Agenda for Sustainable Development	திருமதி. ஆர். விக்ரமசிங்ஹ – பிரதிப் பணிப்பாளர் நாயகம்	28/11/2022 முதல் 29/11/2022 வரை	அ. டொ.300 ரூ.4,142

தொடரிலக்கம்	பயிற்சிகள் / செயலமர்வு / கருத்தரங்கு / நடைபெற்ற நாடு	பயிற்சிச் செயலமர்வு / கருத்தரங்கின் பெயர்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பதவிகள்	கால எல்லை	மொத்த முதலீடு
10	எகிப்து	Expert Meeting on the Implementation of the Sharm-ei-Sheikh Declaration	திரு. சீ.ஏ.எஸ்.ஜீ. அந்தோனி – உதவிப் பணிப்பாளர் நாயகம்	12/12/2022 முதல் 13/1 13/12/2022 வரை	அ. டொ.300 ரூ.28,938

*** தாபனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்புச் செய்வது எவ்வாறு என்பதனை சுருக்கமாக விளக்குக.**

பயிற்சியின் மூலம் அறிவு திறன் மற்றும் உளப்பாங்கு விருத்தியுடன் தொழில் ஊக்குவிக்கப்பட்டு செயலாற்றுகை விருத்தி அடையும். அதற்கு அமைய பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊழியர்களை பங்குபற்றச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏழாம் அத்தியாயம்

7. இணக்கப்பாட்டு அறிக்கை

7. இணக்கப்பாட்டு அறிக்கை

இலக்கம்	ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு	ஒத்தியங்கும் நிலைமை (ஒத்தியங்குகின்றது/ஒத்தியங்கவில்லை)	ஒத்தி யங்கவில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கங்கள்	ஒத்தியங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கான முன்மொழியும் சரியான தீர்மானங்கள் நடவடிக்கைகள்
1	**கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிதிக் கூற்றுக்கள்/ கணக்குகள் உரிய தினத்தன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன.**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	ஒத்தியங்குகின்றது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	ஒத்தியங்குகின்றது		
1.3	வியாபாரங்கள் மற்றும் உற்பத்திகள் தொடர்பான முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு)	-	ஏற்புடையது அல்ல	
1.4	களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு	-	ஏற்புடையது அல்ல	
1.5	விஷேட முற்பணங்கள் கணக்கு	ஒத்தியங்குகின்றது		
1.6	ஏனையவை	-		
2	**ஏடுகள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல் (நி.பி.கு.445)**			
2.1	267/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றுநிருபத்திற்கு அமைய நிலையான சொத்துக்களின் ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகளுக்கு உரிய ஆவணங்கள்/ ஆளுக்குரிய வேதனாதிகளுக்குரிய அட்டைப் பத்திரங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		

2.3	கணக்காய்வு விசாரணைகளுக்குரிய ஆவணங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு உரிய ஆவணங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.5	சகல மாதாந்த கணக்குகளினதும் சாராம்சங்களைத் (CIGAS) தயாரித்து உரிய திகதியன்று பொதுத் திறைசேரியிடம் சமர்ப்பித்தல்	ஒத்தியங்குகின்றது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது	-	
2.7	இன்வென்ட்ரி ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
2.8	மொத்த இருப்புக்களுக்குரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
2.9	இழப்புக்கள் நட்டங்களுக்கு உரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
2.10	பொறுப்புக்களுக்கு உரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
2.11	உப பத்திரங்களுக்குரிய ஆவணத்தினை (GA — N20) இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
03	**நிதி நிருவாகத்திற்கான பணிகளை பிரதிநிதித்துவம் செய்தல் (நி.பி.கு.135)**			
3.1	நிதி அதிகார நிறுவனத்தினுள் நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல்	ஒத்தியங்குகின்றது		
3.2	நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல் தொடர்பாக நிறுவனத்தினுள் அறிவித்து இருத்தல்	ஒத்தியங்குகின்றது		

3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதிலும் கூடிய எண்ணிக்கையின் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் அதிகாரத்தினை ஒப்படைத்தல்	ஒத்தியங்குகின்றது		
3.4	2014.05.11 ஆம் திகதிய மற்றும் 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்திற்கு அமைய, அரச சம்பளப் பத்திரங்களின் மென்பொருட்கள் தொகுதியினைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் நிருவாகத்திற்கு உட்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	ஒத்தியங்குகின்றது		
4	**வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைகள் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியன்று சமர்ப்பித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
4.5	வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றினை உரிய திகதியன்று திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் குறித்துரைக்கப்பட்டு உள்ள தினத்தன்று, சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்களை வழங்கி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி.கு. 134(2) DMA/1-2019 அமைய வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை வழங்கி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம், சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
6.4	நிதிப் பிரமாணக் குறிப்பு 134 (3) பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
7	**கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**			
7.1	DMA சுற்றுநிருபம் 1-2019 இற்கு அமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஆவது உரிய வருடத்திற்குள் நடாத்தி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8	**சொத்து முகாமை**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 07 ஆவது அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களின் கொள்வனவுகள் மற்றும் கழித்து ஒதுக்குதல்கள் என்பன தொடர்பான தகவல்களை கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திடம் சமர்ப்பித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

8.2	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் 13 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம், மேற்படி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலினை ஒருங்கிணைப்பு செய்வதற்காக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்து மேற்படி உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திடம் அறிக்கையிட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைய, பொருட் தொகை மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டு உள்ளதுடன் உரிய அறிக்கைகள் உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன.	ஒத்தியங்குகின்றது		
8.4	வருடாந்தப் பொருட்கள் தொகை மதிப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8.5	கழித்து ஒதுக்கப்பட்ட பொருட்களை ஒதுக்குதல் நி.பி.கு.772 இற்கு அமைய மேற்கொள்ளல்.	ஒத்தியங்குகின்றது		
9	**வாகன முகாமை**			
9.1	தொகுதியில் உள்ள வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் என்பன தயாரிக்கப்பட்டு உரிய தினத்தன்று கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல்.	ஒத்தியங்குகின்றது		

9.2	வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதி ஒன்றில் ஒதுக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
9.3	வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்.	ஒத்தியங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நி.பி.கு. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	ஒத்தியங்குகின்றது		
9.5	2016.12.29 ஆம் திகதிய மற்றும் 2016/30 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், வாகனங்களின் எரிபொருள் தகனத்தினை மீளப் பரீட்சித்தல்	ஒத்தியங்குகின்றது		
9.6	குத்தகைக் காலத்தின் பின்னர், குத்தகை வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்களின் பூரண உரித்தினை சுவீகரித்துக் கொண்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய தினத்தன்று வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
10.2	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டு வரப்பட்ட செயலிழந்த வங்கிக் கணக்குகள் சீர் செய்யப்பட்டு இருத்தல்.	-	அவ்வாறான கணக்குகள் இல்லை	
10.3	வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம்	ஒத்தியங்குகின்றது		

	நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி மீதிகள் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்வு செய்யப்பட்டு இருத்தல்.			
11	**ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கப்பட்டு இருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரையறையினை மீறி விடாத வகையில் செலவுகளை ஏற்றல்.	ஒத்தியங்குகின்றது		
11.2	நி.பி.கு.94(1) பிரகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மூலம் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளின் வரையறைகளைத் தாண்டும் வகையில் பொறுப்புக்களுக்கு முன்வருதல்.	ஒத்தியங்குகின்றது		
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுக்கு ஒத்தியங்குதல்	ஒத்தியங்குகின்றது		
12.2	நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
12.3	ஒரு வருட காலத்திற்கும் மேலாக நிலவி வரும் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.கு. 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கு உரிய நிருவாகக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்.	ஒத்தியங்குகின்றது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதியினை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பணமாக அனுப்பி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

14.2	நி.பி.கு. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்கால பணி முற்பணங்கள் மேற்படி பணி பூர்த்தி அடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்வு செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
14.3	நி.பி.கு. 371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட வரையறைகளை மீறி விடாத வகையில் குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்கால பணி முற்பணங்கள் வழங்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
14.4	பணி முற்பணக் கணக்கின் மீதிகளை திறைசேரி ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்பிட்டுப் பார்த்தல்	ஒத்தியங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய ஒழுங்கு விதிகளுக்கு ஒத்தியங்கும் வகையில், சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மீளச் செலுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்.	-	அவ்வாறான கணக்குகள் இல்லை	
15.2	சேகரிக்கப்பட்டு இருந்த வருமானங்கள், வைப்புக்கள் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டு இருத்தல்.	-	மேற்படி	
15.3	நி.பி.கு176 இற்கு அமைய நிலுவை வருமானங்கள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	-	மேற்படி	
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியினைப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
16.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டு உள்ளன.	ஒத்தியங்குகின்றது		
16.3	20.09.2017 ஆம் திகதிய மற்றும்	ஒத்தியங்குகின்றது		

	04/2017 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.			
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல்களை அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களை வழங்கும் ஆவணம் ஒன்று இற்றைப்படுத்திப் பேணப்பட்டு வருதல்.	ஒத்தியங்குகின்றது		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் இணையத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனம் தொடர்பாக பொது மக்களின் பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
17.3	தகவல்களை அறியும் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்தில் ஒரு முறை அறிக்கைகளைச் சமர்ப்பித்து இருத்தல்.	08 ஆம் பிரிவு ஏற்புடையது அல்ல 10 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படவில்லை		
18	**பிரசைகள் பட்டயத்தினை நடைமுறைப்படுத்தல்.**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018 (1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்தவ அமைச்சின் சுற்றுநிருபங்களின் பிரகாரம் பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயம் ஒன்றினை இயற்றி நடைமுறைப்படுத்தி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
18.2	மேற்படி சுற்றுநிருபத்தின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயத்தினை இயற்றுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தும்	ஒத்தியங்குகின்றது		

	நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் செயன்முறை ஒன்றினைத் தயாரித்து இருத்தல்.			
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 02 இன் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டத்தினைத் தயாரித்து இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
19.2	பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு ஒன்றினை மேலே குறிப்பிடப்பட்டு உள்ள மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குவது இல்லை	ஒதுக்கீடு போதியதாக இல்லாமையின் காரணமாக சகல உத்தியோகத்தர்களுக்கும் 12 மணித்தியால பயிற்சியினை வழங்குவதற்கு இயலாமல் சென்றமை	
19.3	மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மொத்தப் பதிவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு இருத்தல்.	ஒத்தியங்குவது இல்லை		
19.4	மேற்படி சுற்றுநிருபத்தின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல் கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் என்பன தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு மறுமொழி வழங்குதல்**			
20.1	கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு உள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

முற்றும்